AEC Australian Electoral Commission

Tamil/தமிழ்

2022 'ஃபெடரல்' தேர்தலுக்குரிய

# உங்கள் உத்தியோகபூர்வ வழிகாட்டி

சனிக்கிழமை 21 மே 2022

18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஆஸ்திரேலியப் பிரசைகளுக்கு

**வாக்களிப்பு கட்டாயமானது**



## ஆஸ்திரேலியாவின் கட்டமைப்பிற்கு உங்கள் வாக்கு உதவும்

# தேர்தல் ஆணையரின் **செய்தி**

இந்த 'ஃபெடரல்' தேர்தலில் உங்கள் வாக்கைத் திட்டமிட உதவும் வகையில் இந்த வழிகாட்டியை AEC உருவாக்கியுள்ளது. சரியாக வாக்களிப்பது எப்படி, வாக்குச் சாவடியில் என்ன நடக்கிறது, அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் மற்றும் தகவல் வளஆதாரங்களை எவ்வாறு சரிபார்ப்பது என்பதற்கான உதவிக்குறிப்புகளை இவ்வழிகாட்டி விவரிக்கிறது.

தேர்தல் தினத்தன்று நாடு முழுவதும் வாக்குச் சாவடிகளை நாம் திறந்து வைத்திருப்போம், அத்துடன் சமூகங்கள் தங்கள் கருத்தைத் தெரிவிப்பதற்கு ஆதரவுதவியளிக்கும் வகையில் மற்ற வாக்களிப்பு விருப்பத் தெரிவுகளும் இருக்கும்.

**பின்வரும் விடயங்களில் நீங்கள் திடநம்பிக்கை கொள்ளலாம்:**

- உங்கள் வாக்குச் சீட்டுகள் அச்சிடப்படுவது முதல் எண்ணப்படும் வரை தேர்தல் செயன்முறையின் ஒவ்வொரு படிமுறையின் போதும், உங்கள் வாக்குகளைப் பாதுகாத்து நாங்கள் **நேர்மையான** ஒரு தேர்தல் செயல்பாட்டை வழங்குகிறோம்.
- உங்களதும் எங்கள் தேர்தல் ஊழியர்களதும் **உடல்நலம் மற்றும் பாதுகாப்பிற்கு** முன்னுரிமை அளிக்கப்படுகிறது, மேலும் பலவிதமான கோவிட்-19 பாதுகாப்பு நடவடிக்கைகள் நடைமுறையில் இருக்கும்.

வலுவான கருத்துப் பரிமாற்றம் என்பது தேர்தல் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகும், மேலும் நீங்கள் பெறும் அனைத்து தகவல்களையும், குறிப்பாக எமது நன்கு நிறுவப்பட்ட தேர்தல் செயல்முறையை கேள்விக்குள்ளாக்கும் தகவல்களை கவனமாக பரிசீலிக்கும்படி நான் உங்களை ஊக்குவிக்கிறேன். **அது அங்கீகரிக்கப்பட்ட மற்றும் நம்பகமான வளஆதாரத்திலிருந்து வந்ததா என்று உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்** பதில் இல்லை என்றால், எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதே எனது பரிந்துரை.

இந்தத் தேர்தலில் உங்கள் கருத்தை எப்படித் தெரிவிக்கலாம் என்பது பற்றிய கூடுதல் தகவலுக்கு செல்க **aec.gov.au**.

**டொம் ரோஜர்ஸ் (Tom Rogers)**
தேர்தல் ஆணையர்

**96%** இற்கும் அதிகமானோர் வாக்காளர் பட்டியலில்

**7,000+** வாக்களிப்பு நிலையங்கள்

**500+** முன்கூட்டிய வாக்களிப்பு நிலையங்கள்

**100,000+** தற்காலிக தேர்தல் பணியாளர்கள்

# நில், கவனி

## இந்த 'ஃபெடரல்' தேர்தலில் வளஆதாரத்தை சரிபார்த்துக் கொள்ளவும்

இந்த 'ஃபெடரல்' தேர்தல் காலத்தில் உங்கள் வாக்களிப்பில் செல்வாக்குச் செலுத்தும் வகையில் பாரிய அளவிலான தகவல்கள் பரவ விடப்படுகின்றன..

இது ஜனநாயக செயல்பாட்டின் ஒரு முக்கிய அங்கமாகும். இது வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் எனையோர் தங்கள் கொள்கைகள் மற்றும் நம்பிக்கைகளை வாக்காளர்களுடன் பரிமாறிக்கொள்வதற்கான ஒரு வழியை வழங்குகிறது.

இருப்பினும், சில தகவல்கள் வேண்டுமென்றே தவறானதாகவோ அல்லது தவறாக வழிநடத்துவதாகவோ இருக்கலாம்.

'ஃபெடரல்' தேர்தல் தொடர்பாக நீங்கள் பார்க்கின்ற, கேட்கின்ற மற்றும் வாசிக்கின்றவற்றைக் கவனமாக நோக்குவது முக்கியம்.

தகவல்கள் பின்வரும் தன்மைகளைக் கொண்டனவா என்பதை கருத்தில் கொள்ள நேரம் ஒதுக்குங்கள்:

- அவை நம்பத்தகுந்தவை அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்க வளஆதரத்தைக் கொண்டவை
- தற்போதையது
- பாதுகாப்பானது (மோசடியானதல்ல)

அவை சமூக ஊடகங்கள் மற்றும் இணையத்தில் உள்ளவையாயின் இது மிகவும் முக்கியமானது.

மேலதிக தகவல்கள் மற்றும் பயனுள்ள உதவிக்குறிப்புகளைக் கொண்ட சிறிய காணொளிகளுக்கும் **aec.gov.au/stopandconsider** இற்குச் செல்லவும்.



# தேர்தல் தினம் சனிக்கிழமை 21 மே 2022

## வாக்களிப்பு நிலையங்கள் காலை 8 மணிக்கு திறக்கப்பட்டு சரியாக மாலை 6 மணிக்கு மூடப்படும்.

ஒரு 'ஃபெடரல்' தேர்தல் நடத்தப்படுகிறது, எனவே ஆஸ்திரேலியர்கள் தமது கருத்துக்கள் மற்றும் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களைப் 'பிரதிநிதிகள் சபை' மற்றும் 'செனட்'-இற்காக தேர்ந்தெடுக்கலாம்.

### யார் வாக்களிக்க வேண்டும்?

18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய அனைத்து ஆஸ்திரேலிய குடிமக்களும் 'ஃபெடரல்' தேர்தல்களில் பதிவு செய்து வாக்களிக்க வேண்டும்.

### நான் எங்கே வாக்களிக்கலாம்?

தேர்தல் தினத்தில் உங்கள் மாநிலம் அல்லது டெரிட்டரிப் பகுதியில் உள்ள எந்த வாக்குச் சாவடியிலும் நீங்கள் வாக்களிக்கலாம். வாக்குச் சாவடிகள் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை திறந்திருக்கும்.

வாக்குச் சாவடிகள் பொதுவாக உள்ளூர் பள்ளிகள், தேவாலயங்கள் மற்றும் சமூக மண்டபங்கள் அல்லது பொதுக் கட்டிடங்களில் அமைந்திருக்கும். உங்கள் அருகிலுள்ள வாக்குச்சாவடியைக் கண்டறிய **aec.gov.au/where** ஐப் பார்வையிடவும்.

உங்களுக்கு நடமாடுதல் கட்டுப்பாடு அல்லது இயலாமை இருந்தால், அல்லது அத்தகைய ஒருவரை கவனித்துக் கொள்பவராக இருந்தால், அத்தைகையோர் செல்வதற்கான வசதிகளுள்ள வாக்குச் சாவடிகளின் விவரங்களை நீங்கள் **aec.gov.au/where** இல் பார்க்கலாம்.

பார்வையற்றோர் அல்லது பார்வைக் குறைபாடுடையோருக்கான வாக்களிப்புத் தெரிவுகள் பற்றி அறிய **aec.gov.au/assistance** -இற்குச் செல்க அல்லது **13 23 26** -இல் அழைக்கவும்.

### நான் வேறொரு மாநிலத்தில் அல்லது டெரிட்டரியில் இருந்தால் என்ன செய்வது?

தேர்தல் தினத்தன்று நீங்கள் வேறொரு மாநிலத்தில் இருப்பீர்களாயின் நிருணயிக்கப்பட்டுள்ள பிற மாநில வாக்களிப்பு நிலையமொன்றில் நீங்கள் வாக்களிக்கலாம் அல்லது முன்கூட்டிய வாக்களிப்பதற்கான பின்வரும் தெரிவுகளில் ஒன்றை மேற்கொள்க.

### தேர்தல் தினத்தன்று என்னால் வாக்களிக்க இயலாவிட்டால்?

தேர்தல் தினத்தன்று உங்கள் மாநிலத்தில் அல்லது டெரிட்டரிப் பகுதியில் உள்ள வாக்களிப்பு நிலையமொன்றிற்கு உங்களால் போக முடியாவிட்டால், தேர்தலுக்கு முன்பாக நேரடியாகவோ தபால் மூலமோ வாக்களிக்க நீங்கள் தகுதி பெறக்கூடும்.

### தேர்தலுக்கு முன்பு எப்படி நேரடியாக வாக்களிப்பது?

தகுதி பெறுவீர்களாயின் தேர்தல் தினத்திற்கு முன்னதாக நீங்கள் வாக்களிக்கலாம். முன்கூட்டிய வாக்களிப்பு நிலையங்கள் **மே 9 திங்கள்கிழமை 2022** முதல் திறந்திருக்கும். அவை திறந்திருக்கும் நேரங்களும் திகதிகளும் வேறுபட்டிருக்கும், எனவே முன்கூட்டிய வாக்களிப்பு நிலையங்கள் பற்றிய விபரங்களை அறியச் செல்க: **aec.gov.au/where**

முன்கூட்டிய வாக்களிப்பு மற்றும் அதற்கு நீங்கள் தகுதி பெறுவீர்களா என்பன உட்பட மேலதிக விபரங்களை அறியச் செல்க: **aec.gov.au/early** அல்லது **13 23 26** எனும் இலக்கத்தினை அழைக்க.

### தேர்தலுக்கு முன்பு எப்படி தபாலில் வாக்களிப்பது?

தகுதியான வாக்காளர்களுக்கு தபால் மூலம் வாக்களிக்கும் வசதி உள்ளது. உங்கள் தகுதியைச் சரிபார்த்து ஆன்லைன் மூலம் **aec.gov.au/pva** இல் விண்ணப்பிக்கவும்

தபால் மூலம் வாக்கிற்கான உங்கள் விண்ணப்பத்தை, **மே 18 புதன்கிழமை 2022 மாலை 6 மணிக்கு முன்னதாக** AEC-ஐ சென்றடையும் விதத்தில் பூர்த்தி செய்யவும்.

உங்களுக்கு ஆன்லைன் அணுகல் இல்லையென்றாலோ மற்றும் அஞ்சல் வாக்கிற்கு விண்ணப்பிக்க விரும்பினாலோ **13 23 26**-ஐ அழைக்கவும்.

### நான் எந்தத் தேர்தல் தொகுதிப் பிரிவில் இருக்கின்றேன்?


நீங்கள் எந்த பிரிவில் வசிக்கிறீர்கள் என்பதை **aec.gov.au/electorate** இல் பார்க்கலாம்.

நீங்கள் மேற்கு **ஆஸ்திரேலியாவில்** அல்லது **விக்டோரியாவில்** வசிக்கிறீர்கள் என்றால், உங்கள் தேர்தல் பிரிவின் பெயர் அல்லது எல்லைகள் மறுபகிர்வு காரணமாக கடந்த ஃபெடரல் தேர்தலிலிருந்து மாறியிருக்கலாம். நீங்கள் வேறு பிரிவில் வாக்களிக்க வேண்டியிருக்கலாம் அல்லது உங்கள் வழக்கமான வாக்குச் சாவடி வேறு பிரிவில் இருக்கலாம்.

### நீங்கள் யாருக்கு வாக்களிப்பது என்பது உங்கள் முடிவாகும்

வாக்குச் சாவடிக்கு வெளியே, வேட்பாளர் பிரதிநிதிகள் உங்களுக்கு எப்படி வாக்களிப்பது என்ற அட்டைகளை வழங்கலாம், இது ஒரு குறிப்பிட்ட வழியில் வாக்களிக்க பரிந்துரைக்கும். எப்படி வாக்களிப்பது என்ற அட்டைகளை நீங்கள் ஏற்கவோ பின்பற்றவோ தேவையில்லை.

வேறு கேள்வி உள்ளதா? **aec.gov.au/faqs** -இற்குச் செல்லவும்




# உங்கள் வாக்கு கணக்கில் எடுக்கப்படச் செய்வது எப்படி

தேர்தல் தினத்தன்று உங்களுக்கு இரண்டு வாக்குச் சீட்டுகள் வழங்கப்படும். பச்சை நிறத்திலானது பிரதிநிதிகள் சபைக்கானது மற்றும் பெரியளவிலான வெள்ளை நிறத்திலானது செனட்டிற்குரியது **இரண்டு வாக்குச் சீட்டுகளையும் நீங்கள் கட்டாயம் நிரப்பவேண்டும்.** பச்சை நிற வாக்குச் சீட்டில் 'பிரதிநிதிகள் சபை'க்கான உங்கள் உள்ளூர் பகுதி அல்லது தொகுதிப் பிரதிநிதிக்கு நீங்கள் வாக்களிப்பீர்கள். வெள்ளை நிற வாக்குச் சீட்டில் செனட்டிற்கான உங்கள் மாநில அல்லது எல்லைப் பிராந்தியப் பிரதிநிதிக்கு நீங்கள் வாக்களிப்பீர்கள்.

## பிரதிநிதிகள் சபை

பச்சை நிற வாக்குச் சீட்டில் உங்கள் விருப்பு ஒழுங்கு வரிசைப்படி **ஒவ்வொரு பெட்டியிலும்** இலக்கமிடவும்.




மாதிரி வாக்குச் சீட்டு

**நீங்கள் ஏதும் தவறு செய்துவிட்டால் கவலைப்பட வேண்டியதில்லை.** இன்னொரு வாக்குச் சீட்டை கேட்டுப் பெற்று மீண்டும் நீங்கள் ஆரம்பிக்கலாம்.

## செனட்


வெள்ளை நிற வாக்குச் சீட்டில் வாக்களிப்பதற்கு இரண்டு தெரிவுகள் உள்ளன.

**'ஒன்றில்'**

### கோட்டிற்கு மேலே

கோட்டிற்கு மேலே நீங்கள் வாக்களிக்கத் தீர்மானிப்பதாயின் நீங்கள் **குறைந்தது 6 பெட்டிகளில் இலக்கமிட** வேண்டும்.

உங்கள் முதல் தெரிவுக்குரிய கட்சியின் அல்லது குழுவின் பெட்டியில் '1' என்றும் இரண்டாம் தெரிவுக்குரியதில் '2' என்றும் தொடர்ந்து குறைந்தது 6 பெட்டிகளில் இலக்கமிடவும். கோட்டிற்கு மேலே நீங்கள் விரும்புகின்ற அத்தனை பெட்டிகளிலும் உங்கள் விருப்பத் தெரிவுக்கு ஏற்ப தொடர்ந்தும் நீங்கள் இலக்கமிடலாம்.





மாதிரி வாக்குச் சீட்டு

**'அல்லது'**

### கோட்டிற்குக் கீழே

கோட்டிற்குக் கீழே நீங்கள் வாக்களிக்க விரும்புதாயின், **குறைந்தது 12 பெட்டிகளிலேனும்** 1 இலிருந்து 12 வரை உங்கள் தெரிவின் ஒழுங்கு வரிசைப்படி ஒவ்வொரு வேட்பாளருக்கும் நீங்கள் இலக்கமிட வேண்டும். கோட்டிற்கு கீழே நீங்கள் விரும்புகின்ற அத்தனை பெட்டிகளிலும் உங்கள் விருப்பத் தெரிவுக்கு ஏற்ப தொடர்ந்தும் நீங்கள் இலக்கமிடலாம்.




மாதிரி வாக்குச் சீட்டு

AEC யின் வலைத்தளத்தில் வாக்களிப்பது எப்படி என்பதை நீங்கள் பயிற்சி செய்யலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா? **aec.gov.au/practise** என்ற வலைத்தளத்திற்குச் செல்க.

BE COVIDSAFE

# வாக்களிப்பதற்கு முன்பு **தயாராவதற்காக நீங்கள் என்ன செய்ய முடியும்**

வாக்களிக்கும்போது உங்களையும் மற்றவர்களையும் பாதுகாப்பாக வைத்திருக்க நீங்கள் நடவடிக்கைகள் எடுக்கலாம்.

- **கோவிட்-19 அறிகுறிகள் உள்ளனவா? வாக்குச் சாவடி ஒன்றிற்கு வராமைக்கு நன்றி.**
- சுகயீனமுற்றிருந்தால், தபால் மூலமான வாக்கிற்கு விண்ணப்பிக்க நீங்கள் தகுதி பெறலாம். **aec.gov.au/pva** -இல் இணையவழியாக நீங்கள் **மே 18 புதன்கிழமை 2022 மாலை 6 மணி** வரை விண்ணப்பிக்கலாம்.
- வாக்களிப்பதற்கு முன் வேற்பாளர்கள் மற்றும் விருப்பத்தெரிவுகள் பற்றிய உங்கள் ஆய்வை மேற்கொள்ளுங்கள். வேட்பாளர்களின் பட்டியல்கள் **aec.gov.au/election/candidates.htm** இல் உள்ளன.
- முடிந்தளவுக்கு, தகுதியான வாக்காளர்கள் மட்டுமே வாக்குச் சாவடிக்குச் செல்வதை உறுதிப்படுத்துங்கள்.
- வாக்குச் சாவடிகளில் அல்லது அதைச் சுற்றியுள்ள இடங்களில் கூடுதல் நேரம் கதைத்துக் கொண்டிருப்பதைத் தவிர்க்கவும்

சமீபத்திய புதுப்பிப்புகள் மற்றும் ஆலோசனைகளுக்கு **aec.gov.au/covid-safety**-ஐப் பார்வையிடவும்


# வாக்களிப்பு நிலையத்தில் என்ன நடக்கும்?

### வாக்களிக்கும் படிமுறைகள்

1. வாக்களிக்கும் அதிகாரி உங்கள் முழுப்பெயர் மற்றும் முகவரியையும், மற்றும் இந்த ‘ஃபெடரல்’ தேர்தலில் நீங்கள் இதற்கு முன்பு வாக்களித்தீர்களா என்றும் கேட்பார். வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரின் மேல் கோடிடப்படும்.
2. உங்களது வாக்குச் சீட்டுகள் உங்களுக்கு வழங்கப்படும்:
3. வாக்குச் சாவடியில், உங்கள் வாக்குச் சீட்டில் உள்ள வழிமுறைகளை கவனமாகப் படிக்கவும் அல்லது வாக்களிக்கும் அதிகாரியிடம் உதவி கேட்கவும்.
4. உங்கள் வாக்குச் சீட்டுகளை நிரப்பவும்.
5. உங்கள் வாக்குச் சீட்டுகளை மடித்து அவற்றை வாக்குப் பெட்டிகளில் இடவும்.

### ‘கோவிட்-19’ பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளன

- எந்த நேரத்திலும் ஒரு வாக்குச் சாவடிக்குள் இருக்க முடியுமான வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு எல்லை இருக்கலாம். நீங்கள் வெளியே வரிசையில் நிற்கும்படி கேட்கப்படலாம்.
- வெளியேயும் உள்ளேயும் மற்றவர்களுக்கு இடையில் 1.5 மீட்டர் தூர இடைவெளியைப் பேணவும், மேலும் வாக்குச் சாவடியில் தரையிலுள்ள குறிப்பான்களை வழிகாட்டியாகப் பின்பற்றவும்.
- QR குறியீட்டைப் பயன்படுத்தி அல்லது கையேட்டில் பதிவு செய்து உள்ளே செல்லவும்.
- உங்கள் பகுதியில் உள்ள முகக்கவச வேண்டுகோள்களைப் பின்பற்றவும்.
- வழங்கப்பட்ட கை சுத்திகரிப்பான்களைப் பயன்படுத்தவும்.
- வாக்குச் சாவடிகள் மற்றும் பென்சில்கள் தொடர்ந்து சுத்தம் செய்யப்படும். நீங்கள் விரும்பினால் உங்கள் சொந்த பேனாவை அல்லது பென்சிலைக் கொண்டு வாருங்கள், ஆனால் அதை விட்டுச்செல்லாதீர்கள்.




**1.5 மீட்டர் தூர இடைவெளி விட்டு நிற்கவும்**



**உங்களுக்கு ‘கோவிட்-19’ அறிகுறிகள் ஏதும் இருந்தால் வீட்டிலேயே இருங்கள்**



**உங்கள் இருமல் மற்றும் தும்மல்களை மறைத்துக் கொள்ளவும்**



**உள்ளூர் முகக்கவசத் தேவைகளை சரிபார்த்துக் கொள்ளவும்**



**வழங்கப்பட்ட கை சுத்திகரிப்பான்களைப் பயன்படுத்தவும்.**

உங்கள் உள்ளூர் மாநிலம் மற்றும் டெரிட்டரிப் பிரதேச அரசாங்கத்தின் கோவிட்-19 சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது முக்கியம். இந்த வழிகாட்டுதல்களுக்கான இணைப்புகள் **aec.gov.au/covid-safety** இல் உள்ளன

இந்த வழிகாட்டியில் உள்ள தகவல்கள் அச்சிடப்பட்ட நேரத்தில் உள்ள சூழ்நிலைகளைப் பிரதிபலிக்கின்றன. மத்திய மற்றும் மாநில சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையை AEC தொடர்ந்து பின்பற்றும், மேலும் புதுப்பிக்கப்பட்ட எந்த நடவடிக்கைகளும் எமது வலைத்தளத்தில் இருக்கும்.

2022 ‘ஃபெடரல்’ தேர்தலுக்குரிய

# உங்கள் உத்தியோகபூர்வ வழிகாட்டி

**சனிக்கிழமை 21 மே 2022**

## இந்த வழிகாட்டியின் **மாற்றுப் பதிப்புகள்**

### அணுகிப் பெறத் தக்க வடிவங்களிலுள்ள தகவல்கள்

இந்த வழிகாட்டியின் ஆடியோ மற்றும் பெரிய அச்சு போன்ற மாற்று வடிவங்களை நீங்கள் **aec.gov.au/assistance** இல் பதிவிறக்கம் செய்யலாம். **13 23 26** என்ற எண்ணில் அழைப்பதன் மூலம் பிரெய்ல் (பார்வையற்றோர் அச்சுமுறை) உம் கிடைக்கும்.

நீங்கள் காது கேளாதவராக இருந்தால் அல்லது செவித்திறன் குறைபாடு அல்லது பேச்சு குறைபாடு உள்ளவராக இருந்தால், ‘தேசிய ரிலே சேவை’ (NRS) மூலம் எங்களைத் தொடர்பு கொள்ளவும்:

- TTY (செவிமடுப்பு மற்றும் பேச்சுத் தடங்கல் உள்ளோர்) **13 36 77** -ஐ அழைத்து **13 23 26** என்று கூறவும்.
- ‘பேசுங்கள் செவிமடுங்கள் (Speak and Listen) சேவை’யைப் பயன்படுத்துவோர் **1300 555 727** -ஐ அழைத்து **13 23 26** என்று கூறவும்.
- ‘இணைய ரிலே’-யைப் (Internet relay) பயன்படுத்துவோர் NRS உடன் இணைப்பை ஏற்படுத்தி இலக்கம் **13 23 26** வேண்டுமெனக் கேட்கவும்.
- Auslan (ஆஸ்திரேலிய சைகைக் குறி) உரைபெயர்ப்பு சேவைகளும் கிடைக்கும். மேலதிக தகவல்களுக்கு AEC –இன் வலைத்தளத்திற்குச் செல்க.

### பிற மொழிகளில் உள்ள தகவல்கள்

**இவ்வழிகாட்டியின் மொழிபெயர்க்கப்பட்ட பதிப்புகளை aec.gov.au/translated என்ற வலைத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.**

தொலைபேசி உரைபெயர்ப்பு சேவைகளும் உள்ளன. வாக்களிப்பு மற்றும் தேர்தல்கள் பற்றிய தகவல்களைப் பெற **1300 720 153** இல் அழைத்து தமிழில் பேச வேண்டுமெனக் கேட்கவும்.




18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய சகல ஆஸ்திரேலியப் பிரசைகளுக்கும் வாக்களிப்பு கட்டாயமானது.

நீங்கள் வாக்களிக்காவிட்டால் உங்கள் மீது வழக்குத் தொடரப்படலாம். ஒரு முறைக்கு அதிகமாக வாக்களிப்பது சட்ட விரோதமான குற்றச் செயலாகும்.

AEC 21-1558

**aec.gov.au** 13 23 26

AEC Australian Electoral Commission

தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டது, 10 மோர்ட் தெரு, கான்பெரா
Authorised by the Electoral Commissioner, 10 Mort Street, Canberra.